உ

# மாணவர் திருக்குறள்

இலகுவான பொழிப்புரையுடன்

வட மாநில கல்வித் திணைக்களத்தின்
தமிழ்த்தின விழாவுக்காகவும்,
எட்டாம் வகுப்புத் தேர்வுக்காகவும்
தேர்ந்தெடுக்கப்பட்ட
பதின்மூன்று அதிகாரங்கள் மட்டும்

உரைத்தொகுப்பு:
சைவமணி, சித்தாந்தச்செம்மல்,
வித்துவான் மு. சபாரத்தினம்

வெளியீடு;
தமிழ் வளர்ச்சிக் கழகம்,
காரைநகர்.

விலை ரூபா 3 - 00

Siva-Thamilchelvi
9 A

# மாணவர் திருக்குறள்

இலகுவான பொழிப்புரையுடன்

வடமாநில கல்வித் திணைக்களத்தின்
தமிழ்த்தின விழாவுக்காகவும்,
எட்டாம் வகுப்புத் தேர்வுக்காகவும்
தேர்ந்தெடுக்கப்பட்ட
பதின்மூன்று அதிகாரங்கள் மட்டும்

உரைத்தொகுப்பு:
சைவமணி, சித்தாந்தச்செம்மல்,
வித்துவான் மு. சபாரத்தினம்

வெளியீடு;
தமிழ் வளர்ச்சிக் கழகம்,
காரைநகர்.

விலை ரூபா 3 - 00

Siva Thamil.

முதற் பதிப்பு: 1000 பிரதிகள்
திருத்திய உ-ம் பதிப்பு: 2000 பிரதிகள்

உ

# பதிப்புரை

திருக்குறள் தமிழ் மக்களின் தனிப்பெருஞ் சொத்து. அச்சொத்தில் ஒரு பகுதியையேனும் இளைய தலைமுறையினரான மாணவர்கள் விரும்பிக் கற்று அனுபவிக்க வேண்டும் என்ற அளப்பரிய ஆசையினால், எட்டாம் வகுப்பு மாணவர்களை மையமாக வைத்து எழுதப்பட்டதே இந்தப் புதிய இலகுவான பொழிப்புரை.

அகில இலங்கைத் தமிழ் மறைத் தேர்வை பல்லாண்டுகளாக நடத்தி, ஆண்டுதோறும் மகாநாட்டில் தக்க பரிசில்களை மாணவர்களுக்கு மனமுவந்து அளித்து, திருக்குறளே தமிழனின் வாழ்வுக்கு வழிகாட்டி என்பதை அகில உலகமெங்கும் நாளும் பரப்பி வரும் பெருந்தகையாகிய

ஊர்காவற்றுறைத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர்

**பண்டிதர் கா. பொ. இரத்தினம் பி. ஓ. எல்**

அவர்களுக்கு

இச்சிறு நூலைக்

**காணிக்கையாக**

வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

காரைநகர்.
13 - 2 - 82

**பாலா பதிப்பகம்**

உ
சிவமயம்

# முகவுரை

தமிழ் மொழிக்குக் கதியாக விளங்கும் வள்ளுவர் அருளிய திருக்குறளை, மாணவர்கள் கற்றுப் பயனடைய வேண்டும் என்னும் நோக்கோடு நாற்றுமுப்பத்து மூன்று அதிகாரங்களில், பதின்மூன்றை மட்டும் தேர்ந்தெடுத்து இலகு நடையில் எழுதிப் பொழிப்புரையையும் சேர்த்து வெளியிட்டுள்ளேன்.

எட்டாம் வகுப்பில் பயிலும் மாணவர்களின் தமிழுக்கு உறுதுணையாக ஐந்து அதிகாரங்களை மட்டும் அரசினர் குறிப்பிட்டுள்ள போதிலும், வடமாநிலக் கல்வித் திணைக்களத்தால் நடத்தப்படவுள்ள தமிழ்தின விழாவைக் கருத்திற் கொண்டு தொடர்ந்தும் மாணவர்கள் கற்றுக் காலக்கிரமத்தில் திருக்குறள் அனைத்தையுமே படித்து அதன்படி ஒழுக வேண்டும் என்பதே எனது இலட்சியமாகும்.

'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ் நாடு' என்று
பாட்டுக்கொரு புலவனாகிய பாரதியாரால் போற்றப் பட்ட வள்ளுவப் பெருந்தகையின் வாழ்க்கை வரலாற்றினையும், குறளுக்கு உரையெழுதிய உரையாசிரியர்கள் யாவரென்பது பற்றியும், மாணவர்கள் அறிந்திருக்க வேண்டியது அவசியம் என்பதைக் கருத்திற்கொண்டு அவற்றையும் சேர்த்து வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

மாணவர்கள் மனப்பூர்வமாக ஏற்றுக் கற்றுத் தமிழ் மொழியை வளர்க்க வேண்டுமென்று எல்லாம் வல்ல பரம்பொருளைப் பிரார்த்திக்கின்றேன்.

வணக்கம்

சயம்பு வீதி, — மு. சபாரத்தினம்
காரைநகர். — தமிழாசிரியர்
3 - 2 - 82

# திருவள்ளுவரும் குறட் சிறப்பும்

தமிழினத்தின் பண்டைப் பெருமையை உலகமெங்கும் பரப்பிய ஒப்பற்ற நூலை ஆக்கித்தந்த தெய்வப் புலமைத் திருவள்ளுவரைப் பற்றிய வரலாறு திட்ட வட்டமாக அறிய முடியாது போனாலும், திருக்குறளை வைத்துக் கொண்டு பார்ப்போமானால் அவர்வாழ்ந்த காலநிலையையும், அவரது வாழ்க்கை நெறியையும் ஊகித்து உணரலாம்.

ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தமிழகத்திலுள்ள திருமைலாப்பூரிலே 'பகவன்' என்னும் அந்தணனுக்கும் 'ஆதி' என்னும் புலைச்சிக்கும் மகனாக வள்ளுவர் பிறந்தார். கணவன் மனைவிக்கு இடையேயுள்ள ஒப்பந்தப்படி வள்ளுவரையும் பிறந்த இடத்திலேயே தாய்தந்தையர் விட்டுச் சென்றனர் பிள்ளையின்மையால் வருந்திய ஓர் வேளாளப் பெண் இவரை மயிலாப்பூரில் உள்ள இலுப்பைத் தோப்பில் கண்டெடுத்து ஆர்வத்துடன் வளர்த்து வரும் நாளில், அயலார் கூறிய பழிமொழிக்கு அஞ்சிக் கைவிட, இவர் ஒரு வள்ளுவப் புரோகிதன் வீட்டில் வ்ளர்ந்தனர் என்று கூறுவர். இளமையிலேயே வள்ளுவர் முறைப்படி எல்லா நூல்களையும் கற்று, கல்வி கேள்விசளில் சிறந்து விளங்குவாராயினர்.

காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்த மார்க்கசகாயனென்னும் வேளாளர் ஒருவர் வள்ளுவரது கல்வியறிவு ஒழுக்கம் முதலானவற்றைக் கேள்வியுற்று இவரை அழைத்துத் தன் மகளான வாசுகி என்னும் கன்னிகையை இவர்க்கு மணஞ்செய்து கொடுக்க இருவரும் இல்லறத்தை இனிது நடத்தி வாழ்வாராயினர். வள்ளுவர் தம்மீது மதிப்பு வைத்துத் தம்மைச் சன்மானித்து வந்த ஏலேலசிங்கன் என்னும் பிரபுவின் மகன் அழகானந்தனது வேண்டுகோளை ஏற்று திருக்குறளைப் பாடி நிறைவேற்றி, நக்கீரன் முதலான சங்கப்புலவர்களும் அற்புதமெய்திப் பொன்னெனப் போற்றும் வண்ணம் அவர்கள் முன்னிலையில் ஆலவாயில் அரங்கேற்றஞ் செய்தனர்.

செய்யும் தொழில்கள் எல்லாவற்றையும் சீர்தூக்கிப் பார்த்த வள்ளுவர், தமக்குப் பொருத்தமான நெசவுத் தொழிலை மேற்கொண்டார். கற்பிற் சிறந்து விளங்கிய அவரது மனைவியாகிய வாசுகியம்மையார் கணவன் சொல்லுக்கு அமைந்து அடிசிற்கு இனியவளாய், அன்புடையவளாய், வள்ளுவருக்குப் பின்தூங்கி முன்னெழும் பண்புடையவளாய், பெண்களுக்கு அணிகலமாய் விளங்கினள்.

வள்ளுவர் அருளிய திருக்குறளைப் படித்துச் சுவைத்து மகிழ்ந்த சங்கப்புலவர்கள் வள்ளுவரைத் தேவர், நாயனார், முதற்பாவலர் செந்நாப்போதார், தெய்வப்புலவர், பொய்யில்புலவர், மாதானு

பங்கி, பெருநாவலர் என்று பலவாறுகச் சிறப்பித்துக் கூறியமையை நாம் திருவள்ளுவமாலையில் பரக்கக் காணலாம்.

திருவள்ளுவர் ஒரு தெய்வப்பிறவி. அவர் எழுதிய திருக்குறள் உலகிலுள்ள பல்வேறு மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு பல தேசத்தவர்களாலும் நன்கு போற்றப்படுவதால் தமிழினத்தையும், தமிழ் மொழியையும் பற்றி உலகத்தவர்கள் உணரத் தக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. வள்ளுவர் குறட்பாவாகிய ஒன்றே முக்கால் வரிக்குள்ளாகவே ஒரு கருத்தைத் தெளிவாக அமைத்துக் கொடுத்திருப்பது மிகவும் நுட்பமானது. திருக்குறளில் சொற்கள் சுருங்கிய முறையில் இருப்பதால், சொல்லுவதற்கும், நினைவு படுத்திக் கொள்ளுவதற்கும் இலகுவாக இருக்கிறது. வானத்தை நாம் அண்ணுந்து பார்த்தால் குறிப்பிட்ட ஒரளவு தூரத்தில் இருப்பது போலத் தோற்றுகின்றது. ஆனல் மேலே செல்லச் செல்ல வானமும் உயர்ந்து கொண்டே போகின்றது. அவ்வாறே எளிதாகிய திருக்குறள் அடக்கியுள்ள பொருளோ வரையறையின்றி வளர்ந்து கொண்டே செல்லுகின்றது. அதனுலேயே உரையாசிரியர்களான தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர், பரிமேலழகர் பருதி, திருமலையர், மல்லர், கவிப்பெருமாள், காளிங்கர் ஆகிய பதின்மர் திருக்குறளுக்கு உரைகள் எழுதியும் மேலும் உரைகள் பெருகிக் கொண்டே போகின்றன. எல்லோரது உரைகளையும் ஒப்பிட்டு ஆராய்ந்த புலவர் ஒருவர்,

> "பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ பாரிலுள்ள
> நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ - நூலிற்
> பரித்த வுரை யெல்லாம் பரிமேலழகன்
> விரித்த வுரையாமோ விளம்பு"

என்று குறிப்பிட்டவாறு பரிமேலழகரின் உரையே ஏனையோரது உரைகளைவிட மேலானது. அவ்வுரையைத் தழுவியே இப்பொழிப்புரை இலகுநடையில் எழுதப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

> கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக்
> குறுகத் தரித்த குறள் -இடைக்காடர்

> அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக்
> குறுகத் தரித்த குறள். -ஒளவையார்

> உள்ளுதொறும் உள்ளுதொறும் உள்ளம் உருக்குமே
> வள்ளுவர் வாய்மொழி மாண்பு -மாங்குடி மருதனுர்

# 1. கடவுள் வாழ்த்து

1. அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

2. கற்றதனுல் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்ருள் தொழாஅர் எனின்

3. மலர்மிசை ஏகினுன் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்

4. வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல

5. இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு

6. பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்ருர் நீடுவாழ் வார்

7. தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது

8. அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது

9. கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை

10. பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்

# 1. கடவுள் வாழ்த்து - பொழிப்புரை

1. அகரஒலியே எல்லா எழுத்துக்களுக்கும் முதலாய் அமைவது போல, ஆதிபகவன் உலகில் உள்ள உயிர்கள் எல்லாவற்றிற்கும் முதல்வனாக இருக்கின்றான்.

2. தூய அறிவே வடிவான இறைவனின் நன்மைதரும் பாதங்களைத் தொழாதவர் என்றால், அவர் கற்றமையால் உண்டான பயன் ஒன்றுமில்லை.

3. அன்பர்களின் நெஞ்சமாகிய மலரில் சென்று வீற்றிருக்கின்ற இறைவனது சிறந்த திருவடிகளைச் சிந்திப்பவர்களே, உலகில் நிலைபெற்று வாழ்வார்கள்.

4. விருப்பு வெறுப்பு அற்றவனாகிய இறைவனின் திருவடிகளைச் சிந்திப்பவர்களுக்கு, எவ்விடத்திலும் எக்காலத்திலும் துன்பம் இல்லை.

5. இறைவனின் உண்மையான புகழைப் பேசுகின்றவரிடத்து அஞ்ஞானத்தைத் தருவனவாகிய நல்வினை தீவினை ஆகிய இரண்டும் வந்து சேராது.

6. ஐம்பொறிகளின் மூலம் உண்டாகின்ற ஆசைகளை அடக்கி வென்று, பொய்யில்லாத ஒழுக்க வழியில் நின்றவரே நிலையான வாழ்வினர் ஆவர்.

7. தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவனின் திருவடிகளைத் தியானிப்பவர்களுக்கு அல்லாமல், ஏனையோர்க்கு மனக்கவலையை மாற்றுதல் அரிதாகும்.

8. அறக் கடலான கடவுளின் பாதங்களைச் சிந்திப்பவர்க்கு அல்லாமல், பிறர்க்கு இன்பமும் பொருளும் ஆகிய கடல்களைக் கடத்தல் இயலாது.

9. எண்வகைக் குணங்களின் உருவான இறைவனின் திருவடிகளை வணங்காத தலை, செவிட்டுக் காதும் குருட்டுக் கண்ணும் போலப் பயனற்றதாகும்.

10. இறைவனின் பாதங்களை இடையறாது சிந்திப்பவர்களே பிறவியாகிய கடலைக் கடப்பார்கள்; சிந்திக்காதவர்களால் கடக்க இயலாது.

# 2 வான் சிறப்பு

1. வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான் அமிழ்தம் என்றுணரற் பாற்று

2. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை.

3. விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உள்நின்று உடற்றும் பசி

4. ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால்

5. கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை

6. விசும்பின் துளிவீழின் அல்லால்மற்று ஆங்கே
பசும்புல் தலைகாண்பு அரிது

7. நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி
தான்நல்கா தாகி விடின்

8. சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு

9. தானம் தவம்இரண்டும் தங்கா வியன்உலகம்
வானம் வழங்கா தெனின்

10. நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு

# வான் சிறப்பு - பொழிப்புரை

1. மழை பெய்வதனாலேதான் உலகத்து உயிர்கள் வாழ்கின்றன; ஆதலால், மழையே உயிர்களுக்கு 'அமிழ்தம்' என்று உணரத் தகுந்தது.

2. உண்பவர்களுக்கு தகுந்த உணவுப் பொருள்களை விளைவித்துக் கொடுத்து, குடிப்போருக்கு தானும் ஓர் உணவாக (பருகும் நீராக) விளங்குவதும் மழையே ஆகும்.

3. மழை பெய்யாது தவறினால், கடலால் சூழப்பட்டுள்ள இப் பரந்த உலகினுள் பசி நிலைபெற்று உயிர்களை வருத்தும்.

4. 'மழை' என்னும் வருவாயின் வளம் குறையுமானால், பயிர் செய்யும் உழவரும் (உணவுப் பொருள்களை விளைவிக்க) ஏரினால் உழவைச் செய்ய மாட்டார்கள்.

5. தக்க காலத்தில் பெய்யாது உலகில் வாழும் உயிர்களைக் கெடுப்பதும் மழை; அப்படிக் கெட்டவற்றைப் பெய்து வாழச் செய்வதும் மழையே ஆகும்.

6. மேகத்திலிருந்து மழைத்துளி வீழாவிட்டால், உலகத்தில் பசிய புல்லின் நுனியைக் கூடக் காண்பது அருமையாகி விடும்.

7. மேகமானது கடல் நீரை முகந்து சென்று மீண்டும் மழையாகப் பெய்யாவிட்டால், அப்பெரிய கடலும் தன்னியல்பிற் குறைந்து போகும்.

8. மழையானது முறையாகப் பெய்யாவிட்டால், உலகத்திலே தேவர்களுக்காக நடத்தப்படும் திருவிழாக்களும், பூஜைகளும் நடைபெற மாட்டாது.

9. மழை பெய்து உதவாவிட்டால், இப்பரந்த உலகத்திலே பிறருக்காகச் செய்யப்படும் தானமும், தனக்காக மேற் கொள்ளும் தவமும் இல்லாமற் போய்விடும்.

10. நீர் இல்லாமல் எத்தகையோருக்கும் உலக வாழ்க்கை அமையாது என்றால், மழை இல்லாமல் ஒழுக்கமும் நிலை பெறாது.

# 4. அறன் வலியுறுத்தல்

1. சிறப்புஈனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு

2. அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊங்கில்லைக் கேடு

3. ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாஞ் செயல்

4. மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்துஅறன்
ஆகுல நீர பிற

5. அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்

6. அன்றுஅறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை

7. அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை

8. வீழ்நாள் படாஅமை நன்றுஆற்றின் அஃதுஒருவன்
வாழ்நாள் வழிஅடைக்கும் கல்

9. அறத்தான் வருவதே இன்பம்மற்று எல்லாம்
புறத்த புகழும் இல

10. செயற்பால தோரும் அறனே ஒருவற்கு
உயற்பால தோரும் பழி

# அறன் வலியுறுத்தல் - பொழிப்புரை

1. அறமானது சிறப்பையும் செல்வத்தையும் தரும். அதனால் அறத்தைவிட உயிருக்கு உறுதி தருவது வேறு யாதுமில்லை.

2. அறவழியில் வாழ்வதைக் காட்டிலும் உயிருக்கு நன்மை தருவது வேறில்லை. அத்தகைய அறவழியைப் பின்பற்றாமல் அதனை மறத்தலைக் காட்டிலும் கேடு தருவது வேறில்லை.

3. நம்மால் இயன்ற வகைகளில் எல்லாம், முடியக்கூடிய வழிகளில் எல்லாம், அறத்தை இடைவிடாமல் தொடர்ந்து செய்து வருதல் வேண்டும்.

4. தன் மனத்தில் எத்தகைய குற்றங்களையும் எண்ணுதிருத்தல் சிறந்த அறமாகும். ஏனைய அனைத்தும் ஆரவாரத் தன்மையை உடையனவாகும்.

5. பொறாமை, ஆசை, கோபம், கடுஞ்சொல் என்னும் நான்கிற்கும் ஒருசிறிதும் இடம் கொடுக்காமல் ஒழுகிவருவதே அறம் ஆகும்.

6. 'பிற்காலத்தில் பார்ப்போம்' என்று பின்போட்டுவைக்காமல் அறத்தை அன்றைக்கே செய்யவேண்டும். அதுவே இறக்கும் காலத்தில் கூடவரக்கூடிய அழியாத துணையாகும்.

7. பல்லக்கைத் தூக்கிச் செல்பவர்களோடு, அதில் ஏறிஅமர்ந்து செல்பவனையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, அறத்தின் பயன் இதுதான் எனக்கூறவேண்டியதில்லை.

8. செய்யாது தவறவிட்ட நாள் என்றில்லாமல், ஒருவன் அறத்தைத் தொடர்ந்து செய்வானானால் அதுவே அவனது பிறவியெடுக்கும் வழியைத் தடுக்கும் கல்லாகும்.

9. அற வாழ்வில் ஈடுபடுவதனால் வருவதே இன்பமாகும்; ஏனைய பொருளும் இன்பமும் இன்பத்தைத் தரமாட்டா; அவைகளால் புகழும் ஏற்படாது.

10. ஒருவன் தன் வாழ்நாள் முழுவதும் செய்யவேண்டியது அறமாகும்; அவன் செய்யாமல் விடவேண்டியது பழிச் செயல்களேயாகும்.

# 8. அன்பு உடைமை

1. அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கண்நீர் பூசல் தரும்

2. அன்பிலார் எல்லாம் தமக்குஉரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு

3, அன்போடு இயைந்த வழக்குஎன்ப ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு

4. அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு

5. அன்புற்று அமர்ந்த வழக்குஎன்ப வையகத்து
இன்புற்றார் எய்துஞ் சிறப்பு

6. அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை

7. என்பில்அதனை வெயில்போலக் காயுமே
அன்பில் அதனை அறம்

8. அன்பகத்து இல்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று

9. புறத்துறுப்பு எல்லாம் எவன்செயும் யாக்கை
அகத்துறுப்பு அன்பில் அவர்க்கு

10. அன்பின் வழியது உயிர்நிலை அஃதுஇலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு

# அன்பு உடைமை - பொழிப்புரை

1. அன்பை அடைத்து வைக்கக்கூடிய பூட்டு எதுவும் இல்லை? அன்புடையாரின் சிறிய கண்ணீரே அவரது அன்பினைப் பலர் அறியும்படியாக வெளிப்படுத்தி விடும்.

2. அன்பில்லாதவர் எல்லாம் தமக்கே உரிமை என்று எண்ணுர் அன்புடையவர் தமது எலும்பைக்கூடப் பிறருக்குக் கொடுத்து மகிழ்வர்.

3. அருமையான உயிர் உடம்போடு சேர்ந்திருக்கும் தொடர் பானது, அன்போடு பொருந்தி வாழும் வாழ்க்கைக்காகவே என்பர் பெரியோர்.

4. அன்பானது பிறரிடத்து விருப்பம் உடையவராகும் பண்பைத் தரும். அந்தப் பண்பானது நட்பு என்கின்ற அளவற்ற மேன் மையைத் தரும்.

5 இவ்வுலகத்திலே இன்பம் அடைந்தவர் பெறும் சிறப்பு அவர் அன்புடையவராகச் சேர்ந்து வாழ்ந்த வாழ்க்கையின் பயனே என்பர்.

6. அறியாதவர்கள் அறத்திற்கு மட்டும் அன்பு துணையாகும் என்று கூறுவர். ஆராய்ந்து பார்க்குமிடத்து மறச்செயல்களுக் கும் அன்பே துணையாகும்.

7. எலும்பில்லாத புழுப்பூச்சிகளை வெய்யில் சுட்டு வருத்துவது போல, அன்பில்லாதவர்களை அறமானது சுட்டு வருத்தும்.

8. மனத்தில் அன்பில்லாதவருடைய வாழ்க்கையானது, கொடு மையான வறைந்திரத்திலே காய்ந்த மரம் தளிர்த்தது போல அழிந்துவிடும்.

9. மனத்தின் உள்ளே அமையவேண்டிய உறுப்பாகிய அன்பு இல்லாதவருக்கு, உடம்பின் புறத்தேயுள்ள கண், காது, கை போன்ற உறுப்புக்களால் எத்தகைய பயனும் இல்லை.

10. அன்போடு பொருந்திய உடம்பே உயிர் நின்ற உடம்பாகும் அன்பு இல்லாதவருக்குரிய உடம்பு எலும்பினைத் தோலாற் போர்த்த வெற்றுடம்பாகும்.

# 9. விருந்து ஓம்பல்

1. இருந்துஓம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்துஓம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு

2. விருந்து புறத்ததாத் தான்உண்டல் சாவா
மருந்துஎனினும் வேண்டற்பாற்று அன்று

3. வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று

4. அகன்அமர்ந்து செய்யாள் உறையும் முகன்அமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல்

5. வித்தும் இடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்

6. செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு

7. இனைத்துணைத்து என்பது ஒன்றுஇல்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன்

8. பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்

9. உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு

10. மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து

# விருந்து ஓம்பல் - பொழிப்புரை

1. இவ்வுலகில் இருந்து, பொருளைப் பேணி, இல்வாழ்க்கையை நடத்துவது விருந்தினரைப் பாதுகாத்து உதவும் பொருட்டேயாகும்.

2. விருந்தாக வீட்டுக்கு வந்தவர் வெளியே இருக்க, தான் மட்டும் உள்ளே உண்ணுதல், இறப்பை இல்லாமற் செய்ய வல்ல அமிழ்தமே ஆயினும் விரும்பத்தக்கதல்ல.

3. தினமும் தன்னிடம் வருகின்ற விருந்தினரை உபசரித்து உணவு கொடுப்பவனுடைய இல்வாழ்க்கை துன்பத்தால் பாழ்படுதல் என்றும் இல்லையாகும்.

4. இனியமுகத்துடன் நல்லமுறையில் விருந்தினரை உபசரிக்கின்றவனுடைய வீட்டிலே, உளமகிழ்ச்சியுடன் இலக்குமி தங்கி நீங்காது இருப்பாள்.

5. விருந்தினரை உபசரித்தபின், எஞ்சியதைத் தான் உண்ணுகின்றவனுடைய வயலில் விதையும் விதைக்க வேண்டுமோ?

6. வந்த விருந்தினரை உபசரித்து அனுப்பி, மேலும் வரும் விருந்தினரை எதிர்பார்த்திருப்பவன், வானத்திலுள்ள தேவர்க்கு நல்ல விருந்தினன் ஆவான்.

7. விருந்தினரை உபசரித்தலின் பயன் இவ்வளவு என்று கூற முடியாது. அது வருகின்ற விருந்தினரின் தகுதிக்கு ஏற்ற அளவினது ஆகும்.

8. பொருளைக் கஷ்டப்பட்டுக் காத்து, அது போய்விட்டபோது 'தாம் பற்றில்லாதவர்' என்று கூறுபவர்கள், விருந்தை உபசரிக்கும் வேள்வியைச் செய்யாதவரேயாவர்.

9. பொருள் இருக்கும்போது 'இல்லாமை' என்பது விருந்தினரை உபசரிக்காமல் விடும் மடமையாகும். இது அறிவில்லாதவரிடமே இருக்கும்.

10. அனிச்சப்பூ மணக்க வாடிவிடும். முகம் மாறுபட்டுப் பார்த்த உடனே வரும் விருந்தினரும் மனம் வாடிப்போவார்கள்.

# 10. இனியவை கூறல்

1. இன்சொலால் ஈரம் அளைஇப் படிறுஇலவாம்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்

2. அகன்அமர்ந்து ஈதலின் நன்றே முகன்அமர்ந்து
இன்சொலன் ஆகப் பெறின்

3. முகத்தான் அமர்ந்துஇனிது நோக்கி அகத்தானாம்
இன்சொ லினதே அறம்

4. துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்
இன்புறூஉம் இன்சொ லவர்க்கு

5. பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற

6. அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின்

7. நயன்ஈன்று நன்றி பயக்கும் பயன்ஈன்று
பண்பின் தலைப்பிரியாச் சொல்

8. சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பம் தரும்

9. இன்சொல் இனிதுஈன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது

10. இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று

# இனியவை கூறல் - பொழிப்புரை

1. உண்மைப் பொருளை அறிந்தவர்களின் வாயிலிருந்து வரும் சொற்கள் இனிய சொற்களாய், அன்பு செறிந்ததாய், வஞ்சனை இல்லாததாய் இருக்கும்.

2. ஒருவன் முகமலர்ச்சியோடு இனிதாகச் சொல்லும் இயல்பும் அமையப்பெற்றால், அதுவே அவன் மனம் மகிழ்ந்து கொடுக்கும் பொருளை விட மேலானதாகும்.

3. முகவிருப்புடன் இனிமையாகப் பார்த்து, உள்ளத்தோடு பொருந்திய இனியசொற்களைச் சொல்லும் அதுவே, சிறந்த அறமாகும்.

4. எல்லோரிடத்தும் இன்பம் உண்டாகத் தக்க இன்சொல்லைப் பேசுவோருக்கு, துன்பத்தை அதிகமாக்கவல்ல வறுமை இல்லையாம்.

5. பணிவு உடையவனாகவும் இனியவற்றைக் கூறுபவனாகவும் ஆகுதல் ஒருவனுக்கு சிறந்த ஆபரணமாகும். ஏனையன எல்லாம் ஆபரணங்கள் ஆகமாட்டா.

6. நன்மையானவைகளையே விரும்பி, இனிய சொற்களையும் ஒருவர் சொல்லி வந்தால், அதனால் பாவங்கள் குறைந்து போக, அறம் வளர்ந்து கொண்டே போகும்.

7. கேட்போர்க்கு நல்ல பயனைக் கொடுத்து, நற்பண்பில் இருந்து சிறிதும் விலகாத இன்சொற்கள், சொல்லுபவனுக்கும் நன்மையைக் கொடுத்து உபகாரம் செய்யும்.

8. சிறுமையான எண்ணங்கள் இல்லாத இனிய சொற்கள் மறுமையிலும், இம்மையிலும் ஒருவனுக்கு இன்பத்தைக் கொடுக்கும்.

9. பிறரின் இனிய சொற்கள் தனக்கு மிகுந்த இன்பத்தை கொடுப்பதை உணருபவன், மற்றவர்களிடத்தில் வன்சொற்களைப் பேசுவது எக்காரணத்தாலோ?

10. இனிய சொற்கள் இருக்கத் தக்கதாக ஒருவன் வன்சொற்களைக் கூறுதல், இனிய பழங்கள் இருக்கத் தக்கதாக அவற்றை விடுத்து காயைத் தின்பதை ஒத்தது.

# 11. செய்ந்நன்றி அறிதல்

1. செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது

2. காலத்தி னால்செய்த நன்றி சிறிதுஎனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது

3. பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது

4. தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்

5. உதவி வரைத்துஅன்று உதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து

6. மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு

7. எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமம் துடைத்தவர் நட்பு

8. நன்றி மறப்பது நன்றுஅன்று நன்றுஅல்லது
அன்றே மறப்பது நன்று

9. கொன்றுஅன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன்று உள்ளக் கெடும்

10. எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுஉண்டாம் உய்வுஇல்லை
செய்நன்றி கொன்ற மகற்கு

# செய்ந்நன்றி அறிதல் - பொழிப்புரை

1. தான் ஒன்றுமே செய்யாது இருக்கவும், பிறர் தமக்கு செய்த உதவிக்கு இப்பூமியும் விண்ணுலகமும் ஈடாக முடியாது.

2. தக்கதருணத்தில் ஒருவன் செய்த உதவி சிறியதாய் இருப்பினும், அதன் பெருமையோ உலகத்திலும் பார்க்க பெரியதாகும்.

3. பிரதியுபகாரம் கருதாது ஒருவர் செய்த உதவியின் தன்மையினை ஆராய்ந்தால், அதன் நன்மை கடலைக் காட்டிலும் மிகப் பெரிதாகும்.

4. உதவியின் பயனை அறிந்தவர்கள், தினையளவு சிறிய உதவியை ஒருவன் செய்தாலும், அதனைப் பனையளவாக மதித்துப் போற்றுவர்கள்.

5. உதவியானது அதன் அளவைக் கொண்டு கணிக்கப்படலாகாது. அது யாருக்குச் செய்யப்பட்டதோ அவரின் பண்பைப் பொறுத்தே கணிக்கப்படும்.

6. மனக்குற்றம் இல்லாதவருடைய நட்பினை ஒருபோதும் மறக்கவேண்டாம். அவ்வாறே துன்பமான நேரத்தில் உதவி செய்பவரின் நட்பையும் விடக்கூடாது.

7. தமக்கு வந்த துன்பத்தை நீக்கியவரின் நட்பை நன்றியுடையோர் ஏழுஏழுபிறப்பிலும் மறவாது நினைவுகூர்ந்து போற்றுவர்.

8. ஒருவர் செய்த நன்மையை மறப்பது நல்ல பண்பு ஆகாது ஆனல், அவர் தீமையை அன்றைக்கே மறந்து விடுவது மிகவும் மேலானது.

9. ஒருவ்ர் நம்மைக் கொல்லும்படியான கொடிய துன்பத்தைச் செய்தாலும், அவர் முன்பு நமக்குச் செய்த நன்மையை நினைத்தால் அத்தகைய துன்பம் மறைந்துவிடும்.

10. எத்தகைய நன்மைகளை அழித்துவிட்டவர்களுக்கும் தப்புதற்கு வழிகிடைக்கும். ஆனல் ஒருவர் தமக்குச் செய்த உதவியை மறந்தவனுக்கு உய்வே கிடையாது.

# 14. ஒழுக்கம் உடைமை

1. ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்

2. பரிந்துஓம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்துஓம்பித்
தேரினும் அஃதே துணை

3. ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்

4. மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பு ஒழுக்கம் குன்றக் கெடும்

5. அழுக்காறு உடையான்கண் ஆக்கம்போன்று இல்லை
ஒழுக்கம் இலான்கண் உயர்வு

6. ஒழுக்கத்தில் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்
ஏதம் படுபாக்கு அறிந்து

7. ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி

8. நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்

9. ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்

10. உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்

# ஒழுக்கம் உடைமை - பொழிப்புரை

1. ஒழுக்கம் எப்போதும் மேன்மையைத் தருவதால், அத்தகைய ஒழுக்கம் உயிரினும் மேலானதாகப் பெரியோரால் காக்கப் படும்.

2. வருத்தப்பட்டு என்றாலும் ஒழுக்கத்தைப் பேணிக் காக்க வேண்டும். எல்லாவற்றையும் ஆராய்ந்து முடிவு எடுத்தாலும் ஒழுக்கமே உயிருக்கு துணையாகும்.

3. ஒழுக்கம் உடையவராக வாழ்வதே உயர்ந்த குடிப்பிறப்பின் தன்மையாகும். ஒழுக்கக் கேடு இழிந்த பிறப்பின் தன்மை யாகும்.

4. படித்ததை மறந்தாலும் மீண்டும் படித்து நினைவுபடுத்திக் கொள்ளலாம். ஆனால் வேதம் ஓதுபவனுக்கு பிறப்பால் வந்த உயர்வு, அவனது ஒழுக்கம் குறைந்தால் கெடும்.

5. பொறாமைப்படுபவனிடத்தில் செல்வம் அமையாதது போல, ஒழுக்கம் இல்லாதவனுடைய வாழ்விலும் உயர்வு கிடை யாது.

6. மனவலிமை உடையவர்கள், ஒழுக்கம் குறைவடைவதால் குற்றம் உண்டாவதை அறிந்து, ஒழுக்கத்திலிருந்து ஒரு போதுமே தவறமாட்டார்கள்.

7. ஒழுக்கத்தால் எல்லோரும் மேன்மை அடைவார்கள். அவ் வாறே ஒழுக்கக்கேட்டினாலும் அடையத்தகாத பழியை அடைவார்கள்.

8. நல்ல ஒழுக்கமானது இன்பமான நல்வாழ்வுக்கு வித்தாக இருக்கும். தீய ஒழுக்கமோ எக்காலத்திலும் துன்பத்தையே தரும்.

9. தீயசொற்களைத் தவறியும் தம் வாயினால் சொல்லும் குற்ற மானது, நல்ல ஒழுக்கம் உடையவர்களுக்கு எப்போதும் பொருந்தாத பண்பாகும்.

10. உலகத்தவரோடு சேர்ந்து ஒழுகும் இயல்பை அறியாதவர் பலநூல்களைப் படித்திருந்தாலும் அறிவில்லாதவரே ஆவர்.

# 40 கல்வி

1. கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக

2. எண்என்ப ஏனை எழுத்துஎன்ப இவ்விரண்டும்
கண்என்ப வாழும் உயிர்க்கு

3. கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்துஇரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்

4. உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்

5. உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்
கடையரே கல்லா தவர்

6. தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்கு
கற்றனைத்து ஊறும் அறிவு

7. யாதானும் நாடுஆமால் ஊர்ஆமால் என்ஒருவன்
சாந்துணையும் கல்லாத வாறு

8. ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து

9. தாம்இன் புறுவது உலகுஇன் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்

10. கேடுஇல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடு அல்ல மற்றை யவை

# கல்வி - பொழிப்புரை

1. கற்பதற்கு தகுதியான நூல்களைப் பழுதில்லாமல படிக்க வேண்டும். படித்ததன் பின்னர் படித்த அக்கல்வியின் தகுதிக் குத் தகுந்தபடி நடக்கவும் வேண்டும்.

2. 'எண்' என்று சொல்லப்படுவதும், 'எழுத்து' என்று கூறப் படுவதும் என்னும் இவை இரண்டும் இவ்வுலகில் வாழும் உயிர்களுக்குக் 'கண்' என்பார்கள்.

3. 'கண்' உடையவர் என்று உயர்வாகக் கூறப்படுவோர் கற்றவரே ஆவர். கல்லாதவர்கள் தமது முகத்தில் இரண்டு புண் உடையவர்கள் ஆவர்.

4. எல்லோரும் மகிழும்படி கூடவிருந்து "இனி என்றுமீளவும் கூடுவோம்" என்று நினைக்கும்படியாகப் பிரிதல் கல்வியறி வுடையார் செய்யல் ஆகும்.

5. செல்வர்களிடத்தில் சென்று உதவிகேட்கும் வறியவர் பணிந்து நிற்பதுபோல, ஆசிரியரிடம் பணிவுடன் படித்தவரே சிறந்தவர்; படியாதவர் இழிந்தோராவர்.

6. மணலில் தோண்டும் கிணற்றில், தோண்டும் அளவுக்கே நீர் ஊறும், அவ்வாறே மக்களுக்கும் அவரவர் முயற்சிசெய்து படித்த அளவுக்கே, அறிவும் ஊறும்.

7. படித்தவனுக்கு எந்தநாடும் நாடாகும்; எந்த ஊரும் ஊரா கும்; இதுவே உண்மையாக இருந்தும் ஒருவன் இறக்கும் வரைக்கும் படிக்காமல் இருப்பது ஏன்?

8. ஒரு பிறவியிலே தான் படித்த கல்வியானது ஒருவனுக்குத் அடுத்து வரும் ஏழு பிறப்புக்களிலும் அவனைப் பாதுகாக்கும் சிறப்புடையது ஆகும்.

9. தாம் மகிழும் கல்வியினாலே உலகத்தவரும் மகிழ்ச்சியடை வதைக் கண்டு, கற்றறிந்தவர்கள் மேன்மேலும் தாம் படிப் பதையே விரும்புவார்கள்.

10. 'அழிவில்லாத சிறந்த செல்வம்' என்பது கல்விச் செல்வமே ஏனைய பொன், பொருள், மண் என்னும் செல்வங்கள் ஒரு வனுக்குச் சிறந்த செல்வங்கள் ஆகாது.

# 43, அறிவு உடைமை

1. அறிவுஅற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்அழிக்கல் ஆகா அரண்

2. சென்ற இடத்தால் செலவிடாது தீதுஒரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு

3. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு

4. எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்பது அறிவு

5. உலகம் தழீஇயது ஒட்பம் மலர்தலும்
கூம்பலும் இல்லது அறிவு

6. எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு

7. அறிவுடையார் ஆவது அறிவார் அறிவிலார்
அஃதுஅறி கல்லா தவர்

8. அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்

9. எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதோர் நோய்

10. அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்

# அறிவு உடைமை - பொழிப்புரை

1. அறிவு என்பது இறுதிக்காலம் வரையும் காப்பாற்றும் கருவியாம். பகைவர் கூட உட்புகுந்து அழிக்கமுடியாத கோட்டையும் அந்த அறிவு ஆகும்.

2. மனத்தை அது விரும்பிச் சென்ற இடங்களுக்குச் செல்ல விடாமல் தீமைகளிலிருந்து விலக்கி, நன்மையில் மட்டுமே செல்ல விடுவது அறிவு ஆகும்.

3. எந்தப் பொருளைப்பற்றியும், எவர் எவரிடமிருந்து கேட்பதனாலும் அப்பொருளினது உண்மைத் தன்மையைக் காண்பது தான் அறிவு ஆகும்.

4. கேட்பவருக்கு விளங்கும்படி இலகுவாகத் தான் விளக்கமாகச் சொல்லியும், ஏனையோர் பேச்சுக்களில் உள்ள நுட்பமான பொருளைத் தான் கண்டறிவது தான், அறிவு ஆகும்.

5. பெரியோர்களை தன்னுடையவர்களாகச் செய்து கொள்வதே அறிவு. அத்தொடர்பிலே முதலில் மகிழ்தலும், பின்னர் கூம்புதலும் இல்லாது ஒரே தன்மையாய் இருப்பதே அறிவு ஆகும்.

6. பெரியோர்கள் எவ்வாறு வாழ்கின்றார்களோ, அவ்வாறே அந்தப் பெரியவர்களோடு தானும் அவர்களைப் பின்பற்றி வாழ்வதுதான் அறிவுடைமை ஆகும்.

7. பின் வரப்போவதை முன்னாகவே அறிபவர்களே அறிவுடையராவர் அவ்வாறு அறிந்து நடக்கத்தெரியாதவர்கள் அறிவில்லாதவர் ஆவர்.

8. பயப்பட வேண்டியவைகளுக்குப் பயப்படாமல் நடப்பது அறிவிலாத தன்மை ஆகும். பயப்படவேண்டியதற்குப் பயப்பட்டு விலகி நடப்பதே அறிவுடையார் செயலாகும்.

9. பின்னர் நடக்கப்போவதை முன்னதாகவே அறிந்து தடுக்க வல்ல அறிவுடையவர்க்கு, அவர் நடுங்கும்படியாக வரக்கூடிய ஒரு துன்பமும் வரமாட்டாது.

10. அறிவுடையார் எல்லா நன்மைகளையும் உடையவராவர். அறிவில்லாதவர்கள் எதனை உடையராயினும் எந்த நன்மையும் இல்லாதவரே ஆவர்.

# 104 உழவு

1. சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை

2. உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃது ஆற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து

3. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற்று எல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்

4. பலகுடை நீழலும் தங்குடைக்கீழ்க் காண்பர்
அலகுஉடை நீழ லவர்

5. இரவார் இரப்பார்க்கு ஒன்றுஈவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்

6. உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேம் என்பார்க்கும் நிலை

7. தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும்

8. ஏரினும் நன்றால் எருஇடுதல் கட்டபின்
நீரினும் நன்றுஅதன் காப்பு

9. செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
இல்லாளின் ஊடி விடும்

10. இலம்என்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலம்என்னும் நல்லாள் நகும்

# உழவு - பொழிப்புரை

1. உழும்போது உண்டாகும் வருத்தத்தைக் கண்டு, வேறு தொழில்களைச் செய்து திரிந்தாலும், முடிவில் கலப்பையை உடையவரையே உலகத்தவர் உணவுக்கு எதிர்பார்த்து நிற்க வேண்டியிருப்பதால், உழவே மிகவும் சிறந்தது.

2. உழவை விட்டு வேறு தொழில்களைச் செய்வோருக்கும் உணவுப் பொருட்களைக் கொடுத்துத் தாங்கிக்கொள்ளுவதனால், உழவுத் தொழில் செய்வோரே உலகத்தாருக்கு அச்சாணி ஆவர்.

3. யாவரும் உண்ணுவதற்கு உணவைக் கொடுத்துத், தாமும் உண்டு வாழ்பவரே உரிமை பெற்ற வாழ்வினர்; ஏனையோர் பிறரைத் தொழுது உண்டு, அவர் பின்னாகச் செல்பவர் ஆவர்

4. உழுதலால் நெல்லைத் தாராளமாக வைத்திருக்கும் கருணையாளர். பல வேந்தர் குடைநிழலின் கீழ் உள்ள உலகம் முழுவதையும், தம் அரசனுடைய குடைக்கீழாக வந்துசேரக் காண்கிற சக்தியைப் பெற்றவர் ஆவர்.

5. உழவைச் செய்து உண்பதனையே இயல்பாக உடையவர்கள் பிறரைத் தாம் இரக்க மாட்டார்கள். தம்மிடத்து வந்து இரப்பவர்களுக்கு வேண்டியதைக் கொடுப்பார்கள்.

6. உழவர்களின் கை உழாது மடங்கிவிடுமானால் "எல்லாரும் விரும்பும் உணவையும் நீக்கிவிட்டோம்" என்று கூறும் துறவிகளும் அவ்வறத்தில் நிலைத்து நிற்க முடியாது.

7. ஒரு பலம் அளவுடைய மணலைக் காற்பலம் அளவுடையதாக ஆருமாறு உழுது காயவிடுவானாகில், அந்நிலத்தில் உண்டான பயிருக்கு ஒரு பிடியளவு எருவும் போடாமலே நன்றாக விளையும்.

8. பலதடவை உழுவதைக் காட்டிலும் எருப்போட்டுப் பசளையிடுதல் நன்று. இவ்விரண்டையும் செய்து களையும் பிடுங்கிய பின்பு பயிரைப் பாதுகாத்தல், நீர்ப்பாய்ச்சுவதிலும் நல்லதாகும்.

9. நிலத்தைஉடையவன் தினந்தோறும் போய்நிலத்தைப் பார்த்து வேண்டியவைகளைச் செய்யாது சோம்பேறியாக இருந்தால், அந்த நிலமும் அவனது மனைவியைப் போல, அவனோடு மாறுபட்டு விளைவைக் கொடுக்காது.

10 நாம் வறுமைப்பட்டவர்கள் என்று சொல்லிச் சோம்பேறியாக இருப்பவரைக் கண்டால் 'நிலமகள்' என்று சிறப்பாகச் சொல்லப்படும் பூமாதேவி தனக்குள்ளே சிரித்து இகழுவாள்.

# 5. இல்வாழ்க்கை

1. இல்வாழ்வான் என்பான் இயல்பு உடைய மூவர்க்கும்
நல் ஆற்றின் நின்ற துணை

2. துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை

3. தென்புலத்தார் தெய்வம் விருந்துஒக்கல் தான்என்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை

4. பழிஅஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழிஎஞ்சல் எஞ்ஞான்றும் இல்

5. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது

6. அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்
போஒய்ப் பெறுவது எவன்

7. இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை

8. ஆற்றின் ஒழுக்கி அறன்இழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து

9. அறன்எனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்பது இல்லாயின் நன்று

10. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்

# இல்வாழ்க்கை - பொழிப்புரை

1. இல்லறத்தோடு கூடிவாழ்பவன், ஏனைய அறத்தில் நிற்கும் மூவரும் (பிரம்மச்சாரி, வானப்பிரஸ்தன் துறவி) செல்லும் அறவழிக்கும் துணையாக இருப்பவன் ஆவன்.

2. ஏனையோரால் கைவிடப்பட்ட அநாதைகளுக்கும், வறுமைப் பட்டோருக்கும், ஒருவரும் இல்லாது இறந்தவர்களுக்கும் இல் வாழ்பவனே துணை ஆவான்.

3. பிதுரர், தேவர், விருந்தினர் உறவினர் தான் என்று கூறப் படுகின்ற ஐந்து இடத்தும் செய்யும் தருமவழியைத் தவறாமல் செய்வதே இல்வாழ்வானுக்குச் சிறந்த அறமாகும்.

4. பாவவழியில் பொருள் சம்பாதிக்காமல், எல்லோருக்கும் பங்கிட்டுத் தான் உண்ணுதலை இல்வாழ்பவன் கைக்கொள் ளுவானாயின், அவனது சந்ததியினர் சிறந்து வாழ்வர்.

5. ஒருவனது இல்வாழ்க்கையானது தனது குடும்பத்திற்குச் செய்ய வேண்டிய அன்பினையும், ஏனையோருக்குப் பங்கிட்டு உண்ணுதல் ஆகிய அறத்தையும் உடையதாக இருப்பின், அதுவே பண்பும் பயனுமாக அமையும்.

6. இல்லறத்தான் ஒருவன் அறவழியில் நடப்பானேயானால் அதைவிடுத்து வேறு துறவறத்தில் போய்ப் பெறக்கூடிய பயன் யாதொன்றும் இல்லையாம்.

7. இல்லறத்தில் இருந்து அதற்குரிய வழியில் தவறாது நடப்ப பவன், ஏனைய நெறிகளின் நின்று புலன்களை அடக்க முற் படும் மூவருள்ளும் மேலானவன் ஆவான்.

8. தவஞ்செய்வோரையும் அந்நெறியில் ஒழுகச்செய்து, தானும் தவறாத இல்வாழ்க்கையை உடைய ஒருவனின் பொறுமை, அத்தவஞ்செய்வோரினும் மேலானது.

9. இல்லறம், துறவறம் ஆகிய இரண்டினுள்ளும் இல்லறமே சிறந்தது. துறவறம் பிறரால் இகழப்படாவிட்டால் இல் லறத்திற்குச் சமானம் ஆகும்.

10. இல்லறத்தில் நின்று முறையாக வாழ்க்கையை நடத்துபவன் மனிதன் ஆனாலும், வானத்தில் உள்ள தேவருள் ஒருவனாக வைத்து நன்கு மதிக்கப்படுவான்.

# 3. நீத்தார் பெருமை

1. ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு.

2. துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக்கொண் டற்று

3. இருமை வகைதெரிந்து ஈண்டுஅறம் பூண்டார்
பெருமை பிறங்கிற்று உலகு

4. உரன்என்னும் தோட்டியான் ஓர்ஐந்தும் காப்பான்
வரன்என்னும் வைப்பிற்குஓர் வித்து

5. ஐந்துஅவித்தான் ஆற்றல் அகல்விசும்புளார்கோமான்
இந்திரனே சாலும் கரி

6. செயற்குஅரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்குஅரிய செய்கலா தார்

7. சுவைஒளி ஊறுஓசை நாற்றம்என்று ஐந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு

8. நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்

9. குணம்என்னும் குன்றுஏறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது.

10. அந்தணர் என்போர் அறவோர்மற்று எவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டுஒழுக லான்

# நீத்தார் பெருமை - பொழிப்புரை

1. தமக்குரிய ஒழுக்கநெறியில் நின்று வழுவாமல் துறவிகளாயி னோரது பெருமைதான் மேலானது என்பது, ஞானநூல்களின் கருத்தாகும்.

2. துறவிகளுடைய பெருமையை அளவிட்டுக் கூற முற்படுதல், உலகத்தில் இன்று வரையில் இறந்தவர்களின் தொகையை கணக்கிடுவதற்குச் சமானம் ஆகும்.

3. பிறப்பு, மோட்சம் ஆகிய இரண்டினதும் தன்மையை அறிந்து, பிறவியை அழித்தற்குத் துறவியானோரின் பெருமை யே உயர்ந்தது.

4. மனவலிமை என்னும் அங்குசத்தால், ஐம்பொறிகளாகிய யானைகள் ஐந்தையும் அடங்குபவன், மேலான மோட்சமாகிய நிலத்திற்கு ஓர் விதை ஆவன்,

5. ஐம்புல இன்பங்களை அடக்கியவனது வலிமைக்கு, அகன்ற வானத்திலுள்ள தேவர்களின் தலைவனான இந்திரனே சாட் சியாவன்.

6. சாதாரண மக்கள் செய்யக்கூடிய இலகுவான காரியங்களைச் செய்யாது அரிய செயல்களைச் செய்பவரே பெரியர்; அவ்வாறு அரிய செயல்களைச் செய்யமாட்டதவர் சிறியராவர்.

7. சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம், என்று கூறப்படுகின்ற ஐம்புல இன்பங்களின் கூறுபாட்டை ஆராய்ந்து அறிந்த வனே, உலகில் மேலானவன் ஆவன்.

8. நிறைந்த மொழிகளைப் பேசும் துறவிகளுடைய பெருமையை உலகத்தில் அவர்கள் ஆணையாகக் கூறிய வார்த்தைகளே வெளிப்படையாக உணர்த்தும்.

9. துறவு, மெய்யுணர்வு, ஆசையின்மை முதலான நற்குணங்கள் ஆகிய மலையின்மேல் நின்ற முனிவர்களின் கோபத்தை, ஒரு கணநேரமாகிலும் தடுத்தல் முடியாத காரியமாகும்.

10. உலகில் உள்ள எல்லா உயிர்களிடத்திலும் அருளுடையவராக விளங்குதலின், அந்தணர் என்று சொல்லப்படுவோர் துறவ றத்தில் நின்றவர் ஆவர்.

அச்சுப்பதிவு;
பாலா அச்சகம், காரைநகர்.
போன்: 24



காரைநகர் தமிழ் வளர்ச்சிக்கழகத்தின் கௌரவ செயலாளராக சங்கநூற் செல்வர்பண்டிதமணி சு. அருளம்பலவனார் பாராட்டு விழாக் காலத்தில் (1963) இருந்துபணியாற்றிய வித்துவான் மு. சபாரத்தினம் அவர்கள், சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஐந்து ஆண்டுகள் படித்துப் பட்டம் பெற்றவர். படிக்கும் போதே (1952) அகில இந்திய பல்கலைக் கழக ரீதியில், சென்னை மாணவர் மன்றம் நடத்திய கட்டுரைப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுப் பதக்கத்தையும், பாராட்டையும் பெற்றவர். திருக்குறளிலும், சைவசித்தாந்த நூல்களிலும், தக்க பயிற்சியும், புலமையும் வாய்ந்தவர். மத்தியதர வகுப்பு மாணவர்களுக்கு எளிதாக விளங்கத் தக்கதான இலகு நடையில் தேர்ந்தெடுத்த பதின்மூன்று அதிகாரங்களுக்கு மட்டும் பொழிப்புரையை எழுதி வெளியிடுவதின் மூலம் திருக்குறளை மாணவர்கள் விரும்பிக் கற்றுத் தமிழ் மொழியில் தக்க ஆர்வமும், பற்றும் கொண்டு திகழ்வார்கள் என்பதில் ஐயமில்லை.

''ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி
நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி''

வாழ்க சைவமணி! வளர்க அன்னாரது தொண்டு!!

க. வைத்தீசுவரக்குருக்கள்
இளைப்பாறிய அதிபர்

ஈழத்துச் சிதம்பரம்
காரைநகர். 10 - 2 - 82

பாலா அச்சகம், காரைநகர். போன்- 24